ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2263/20 - 2022 ජනවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.20

*2263/20 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாணசபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(1)(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2(1)(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
வடக்கு மாகாணம்,
*2022, சனவரி 13.*

1A - PG 5720 — 15 (2022/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் 2021.12.31 ஆந் திகதிக்குள் நிறைவேற்றப்படாத காரணத்தால், 2022.01.01 ஆந் திகதி முதல் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையால் நிறைவேற்றப்படும் வரை, மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மொஹமட் இஸ்மாயில் மொஹமட் இஸதீன் அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவின மதிப்பீட்டின் படியான பின்வரும் செலவுகளை மட்டும் மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தை வழங்குகின்றேன்.*

1. சம்பளங்களும் படிகளும்
2. பயணப்படிகள்
3. ஏற்றியிறக்கல் தொலைத்தொடர்பு மற்றும் பயன்பாட்டுச் சேவைகள்
4. வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும்

EOG 01 - 0205

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.